பேராசிரியர் கோபாலசுவாமி ரமேஷ்

# கடவுளைக் கண்டோமா?

கடவுளைக் கண்டுவிட்ட திருப்தியில் மனித இனம் கடந்த சில நாட்களாக திளைத்துக் கொண்டிருக்கிறது. எல்லா சிருஷ்டிக்கும் மூலாதாரமாக ஏதாவது ஒரு துகள் உள்ளதா? அதாவது எந்த ஒரு பொருளையும் எடுத்து கூறுபோட்டால் கடைசியில் மிஞ்சுவது ஒரு துகளாக இருக்கும். அந்தத் துகள் கூறுபோட முடியாத அளவுக்கு இருந்தால் அதிலிருந்துதான் உலக ஜீவராசிகள் பிறந்திருக்குமா? இவ்வளவு பெரிய கேள்விக்கு விடை தேடி சுமார் 180 ஆண்டுகளுக்கு முன்பே ஜான் டால்டன் என்ற விஞ்ஞானி அட்டாமிக் தியரியை (Atomic Theory) முன்மொழிந்தார். இதன்படி, உலகத்தில் உள்ள அனைத்து பொருட்களும் 'atom' என்னும் அணுக்களால் ஆனது. அணுவை உடைக்கவோ, பிரிக்கவோ, படைக்கவோ, அழிக்கவோ முடியாது என்பது நிரூபணமாகியிருந்தது.





இதற்கு அடுத்து வந்த விஞ்ஞானிகள் பலர் முயற்சியால், இது தவறு என்றும், அணுவின் உள்ளே புரோட்டான், நியூட்ரான், எலெக்ட்ரான் என பல சிறிய துகள்கள் உள்ளன என்று நிரூபித்தனர். இதில் புரோட்டான், நியூட்ரான் இவைகளுக்கே எடை இருப்பதாக நிரூபிக்க பட்டது. இந்த கால கட்டத்தில், புரோட்டான் மற்றும் இந்த இதர துகள்களை மேலும் கூறு போட முடியாது என்று வாதிட்டினர். ஆனால், எதுவும் நிலைப்பது இல்லை என்பது போல, இந்த புரோட்டான்களையும் கூறுபோட்டு பலவிதமான "குவார்க்ஸ்" (quarks) என்னும் துகள்கள் இருப்பதை நிலைநாட்டினார்கள். பலவிதமான குவார்க்ஸ் இருப்பதால், எல்லாவற்றுக்கும் மூலாதாரமாக ஒரே ஒருவிதமான துகள் இருக்குமா இல்லையா என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் தலைதூக்கின.

1960ல் பிரிட்டிஷ் விஞ்ஞானி பேராசிரியர் ஹிக்ஸ் என்பவர் "இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருள்களுக்கும் மூலாதாரமாக ஒரு துகள் இருக்கிறது" என்ற தத்துவத்தை முன் மொழிந்து, இந்த துகளுக்கு 'ஹிக்ஸ் போசான்' என்று பெயரும் சூட்டினார். அன்று முதல் இந்தத் துகளை கண்டுபிடிக்கும் முயற்சியும் ஆராய்ச்சியும் தீவிரம் அடைந்தது. இந்த ஆராய்ச்சிகளுக்கு பெரிய அளவில் பணம் தேவைப்படும். ஆராய்ச்சிகளும் கடினமானவை. இந்த ஆராய்ச்சிகளுக்காகவே சுவிட்சர்லாந்து நாட்டில் பத்து பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் 'செர்ன்' என்னும் நிறுவனம் 17 மைல் நீளமான ஒரு சுரங்கத்தை பூமிக்கு மிக கீழே அமைத்து சோதனைகளை பல வருடங்களாக மேற்கொண்டது. இந்த சுரங்கத்தில், அணுக்கள் பல்லாயிரக்கணக்கான மைல்வேகத்தில் ஓடி, ஒன்றோடு ஒன்று மோதி, சிதறி, சிறு துகள்களாக உடைந்தன. இந்த ஆராய்ச்சியின் முடிவாகத்தான் இந்த வாரம், "ஹிக்ஸ் போசான்" துகளை கண்டு பிடித்ததாக அறிவித்திருக்கிறார்கள். சரியாகச் சொல்ல வேண்டுமானால், 'நாங்கள் கண்டுபிடித்து உள்ளது ஹிக்ஸ் போசான் துகளாக இருக்க சாத்தியகூறுகள் அதிகமாக இருக்கிறது. இன்னும் நிச்சயமாக சொல்ல முடியாது' என்றே சொல்கிறார்கள்.

இப்படி இருக்கும்போது எப்படி கடவுள் துகளை கண்டுபிடித்து விட்டார்கள் என்று மீடியா பரபரப்பைக் கிளப்புகிறது? இதில் என்ன இறை தன்மையோ கடவுளின் அம்சமோ இருக்கிறது? ஒன்றுமே இல்லை! இந்த சோதனைகளின் ஒரு குறிப்பெயர் மட்டுமே! இறைவனின் தேடுதல் போல இறை துகள் தேடுதலும் இன்னும் தொடரும்!

அது சரி, அது என்ன ஹிக்ஸ் "போசான்"? ஹிக்ஸ் புரிகிறது. ஆனால் "போசான்"? முதல் முதலில் இம்மாதிரி ஒரு துகள் இருக்கும் என்று முன்மொழிந்த விஞ்ஞானி சத்யேந்திரநாத் போஸ் என்னும் இந்திய விஞ்ஞானியே! ஆர்யபட்டா முதல் இன்றுவரை, விஞ்ஞானத்தில் இந்தியாவோ இந்தியர்களோ இருக்கவே செய்கிறார்கள்!